புதூர் வழியாகச் சென்றால் 20 கிலோ மீட்டர் கோபிச்செட்டிப் பாளையம் வருவதற்கு சுற்றி வரவேண்டும். அத்தாணி, கௌண்டபுதூர் வழியாக வந்தால் 20 கிலோ மீட்டர் சுற்றிவர வேண்டும். இங்கே மொடச்சூரில், கோபியில் ஒரு பெரிய மாட்டுச் சந்தை நடைபெறுகிறது. அங்கே அந்த பகுதியில் உள்ள மக்கள் எல்லாம் கோபிச்செட்டிப்பாளையம் நாள் தவறாமல் சென்றுவர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அந்தச் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு தரைமட்டப் பாலமாவது அமைத்துக் கொடுத்தால் பொது மக்களுக்கும், விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் அன்றாடம் சந்தைக்குச் சென்றுவர வசதியாக இருக்கும் என்ற அந்தக் கருத்தில் தரை மட்டப் பாலமாவது அமைத்துக்கொடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய உருக்கமான கோரிக்கையை ஏற்று அது சாத்தியக்கூறுதானா என்று அரசு ஆராயும்.

மண்ணியாற்றின் குறுக்கே பாலம் அகலப்படுத்துதல்

*10998—திரு. செ. இராமலிங்கம்:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குவி டையளிப்பாரா :

(அ) திருப்பனந்தாள் ஒன்றியம், செருகுடி ஊராட்சிக்கு கனரகப் போக்குவரத்து ஏற்படுத்திட, மண்ணியாற்றின் குறுக்கே தற்போதுள்ள பாலத்தை அகலப்படுத்திட திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு அறிவித்துள்ள 100 கிராமப்புறப் பால வேலைகள் திட்டத்தின் கீழ் இப்படிப்பட்ட வண்டிப் பாலங்களை ; பேருந்து செல்லத்தக்க பாலங்களாக அகலப்படுத்த இந்த ஆண்டிலாவது எடுத்துக்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

1991 சனவரி 25]

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இது ஒரு மாட்டு வண்டிப் பாலமாகும். இருந்தாலும் அந்த ஆயிரம் பேர் இருக்கிற ஒரே ஒரு சிறுகுடி கிராமத்திற்குப் போவதற்குத்தான் இதன் வழிவகை அமைத்திருக்கிறது. இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளும் 100 பாலங்களில் அந்தத் திட்டம் தொடர்ந்திருக்குமானால், இந்த ஊரை எடுத்துக்கொள்வதில் ஆட்சேபணையில்லை.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பால வேலைகளை விரிவுபடுத்தும் நேரத்தில், உறுதிப்படுத்தும் நேரத்தில், தேவைப்படுகிற இடங்களில் ரெகுலேட்டர்-கம்-பிரிட்ஜ் என்கிற அளவில் அந்த வேலைகள் எடுத்துக்கொள்ளப்படுமா ? அதற்காக ஆணை பிறப்பிப்பார்களா என அறிய விரும்புகிறேன். காரணம், தற்போது ஒரே ஆற்றில் ரெகுலேட்டருக்காக ஒரு பாலமும், வண்டிகள் செல்வதற்காக அதன் அருகாமையில் இன்னுமொரு பாலமும் கட்ட வேண்டியிருப்பதால் நிதி வீணாகிறது. எனவே இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து ரெகுலேட்டர்-கம்-பிரிட்ஜ் என்கிற வகையில் கட்ட அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : அப்படித்தான் ஒரு காலத்திலே கட்டிக்கொண்டிருந்தார்கள். இப்போது மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்த யோசனையின் அடிப்படையில்தான் அரசு தன் பணியைச் செய்கிறது.

அரூரில் சேமிப்புக் கிடங்கு கட்டுதல்

*10564—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரூரில் மரவள்ளிக்கிழங்கு சாகுபடி அதிகமாக உள்ளதால், ஜவ்வரிசி மற்றும் மாவு சேமிப்புக் கிடங்கு கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.